

நிதி அமைச்சு

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

செயலாற்றுகை அறிக்கை 2021
செலவினத் தலைப்பு 297

பொருளடக்கம்

அத்தியாயம் 01 – நிறுவன விபரம் / அமுலாக்கத்தின் சுருக்கம்

1.1 அறிமுகம்
1.2 தூரநோக்குகளும் இலக்குகளும்
1.3 நோக்கங்களும் பிரதான செயற்பாடுகளும்
1.4 திணைக்களத்தின் நிர்வாக மற்றும் அலுவலர் குழு
1.5 நிறுவனக் கட்டமைப்பு
1.6 திணைக்களதின் பிரதான பிரிவு
1.7 கம்பனிகளின் நிதியம்

அத்தியாயம் 02 - முன்னேற்றங்களும் எதிர்கால இலக்குகளும்

2.1 விசேட வெற்றி
2.2 சவால்கள்
2.3 எதிர்கால இலக்கு

அத்தியாயம் 03 – வருடாந்த முழு நிதிச் செயலாற்றுகை அறிக்கை

3.1 நிதிச் செயலாற்றுகை அறிக்கை
3.2 நிதி நிலமைப் பற்றிய அறிக்கை
3.3 நிதிப் பாய்ச்சல் அறிக்கை
3.4 வருமான அறிக்கை
3.5 வருமான சேகரிப்பு செயற்றிறன்
3.6 ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டினை உபயோகப்படுத்தும் செயலாற்றுகை அறிக்கை
3.7 நி.பி 208 இன் பிரகாரம், இத்திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள்
3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கைப்படுத்தும் செயலாற்றுகை அறிக்கை
3.9 கணக்காய்வாளரின் அறிக்கை

அத்தியாயம் 04 – செயலாற்றுகை குறியீடுகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை குறியீடுகள்


அத்தியாயம் 05 - நிலையான அபிவிருத்தி நிதியம் (SDG) கையகப்படுத்தும் செயலாற்றுகை அறிக்கை

5.1 கண்டறியப்பட்ட உரிய நிலையான அபிவிருத்தி நிதியம்
5.2 நிலையான அபிவிருத்தி இலக்கினை அடைவதற்கான வெற்றியும் சவால்களும்

அத்தியாயம் 06 – மனிதவள விபரம்

6.1 ஊழியர்களின் முனாமைத்துவம்
6.2 நிறுவனத்தின் செயற்பாடுகளில் பற்றாக்குறையான மனிதவளத்தினால் ஏற்பட்டுள்ள தாங்கம்
6.3மனிதவள அபிவிருத்தி

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை



01 – நிறுவன விபரம் / அமுலாக்கத்தின் சுருக்கம்

1.1 அறிமுகம்

1815 ஆம் ஆண்டில் இலங்கை பொருளாதாரம் ஆங்கிலேய காலணித்துவத்திற்கு உட்பட்டதோடு கோப்பி, தேயிலை, இறப்பர் போன்ற பிரதான ஏற்றுமதிப் பயிர்கள் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் மூலம் இலங்கையின் வியாபார துறை வீச்சினை பரவலாக்க ஆங்கிலேயர்களினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வியாபார செயற்பாடுகளை இலகுவாக்கவென இலங்கையின் கம்பனிகளை பதிவு செய்வதற்காக 1861 ஆம் ஆண்டு கூட்டுப்பங்குத் தொகுதி கம்பனிகள் கட்டளைச் சட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி வரை நிலைத்திருந்த ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இலங்கையின் கம்பனிகள் 1938 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டன.

இச்சட்டத்தின் கீழ் கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் உருவாக்கப்பட்டு அத் திணைக்களத்திற்கு வியாபார சின்னங்கள் கட்டளைச் சட்டம், வியாபார பெயர் கட்டளைச் சட்டம், சீட்டுக் கட்டளைச் சட்டம் மற்றும் பொது ஒப்பந்தங்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றை செயற்படுத்தும் பொறுப்பு வழங்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க தேசிய புலமை சொத்து சட்டத்தின் ஏற்பாட்டுக்கமைய 1980 ஆம் ஆண்டு தேசிய புலமை சொத்து அலுவலகம் உருவாக்கப்பட்டதோடு அத்திணைக்களத்திற்கு 1981 ஆம் ஆண்டு வியாபார சின்னங்கள் கட்டளைச் சட்டத்தை செயற்படுத்தும் பொறுப்பு வழங்கப்பட்டது.

சுதந்திரத்தின பின்பு இலங்கையின் வியாபார தொகுதி உள்நாட்டு அடையாளத்துடன் செயற்பட்டதோடு அதற்கு வசதியாக 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 1982 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டது. இச்சட்டம் 25 ஆண்டுகள் செயல்வலுவில் இருந்துவந்ததோடு அச்சட்டத்தை மேலும் இலகுவாக்கி இலங்கையின் பொருளாதாரத்தை பரவலாக்குவதை கவனத்தில் கொண்டு பாரிய அளவில் முதலீட்டாளர்களை உள்ளீர்த்து கொள்வதற்கு வசதியளிப்பதற்காக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் கட்டளைச சட்டம் 2007 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதியிலிருந்து செயற்படுத்தப்படுகிறது.


1.2 தூரநோக்குகளும் இலக்குகளும்

தூரநோக்கு

இலங்கையில்,வர்த்தகத் துறையை உள்ளடக்கியதான சிறந்த நிருவாகக் கலாசாரத்தை தோற்றுவிக்க முடியுமான வினைத்திறமையாக ஒழுங்குபடுத்திய பரிபாலனத்தை ஏற்படுத்துவதன் மூலம் நம்பிக்கையான வியாபார சூழலை வளர்த்தலும் கட்டியெழுப்பலும்.

செயற்பணி

இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் வர்த்தகக் கொள்கைகளுக்கிணங்க கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் நிருவகிக்கின்ற சட்டங்களின் கீழ் வியாபாரம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் சட்டரீதியானஅமைப்பை வழங்குவதற்கும் அவற்றின் செயற்பாடுகளை இயக்குவதற்கும் உதவுதல்.



1.3 நோக்கங்களும் பிரதான செயற்பாடுகளும்

- 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
- சங்கங்கள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 123
- 1935 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க சீட்டுக் கட்டளைச் சட்டம்
- 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டம்

மூலம் திணைக்களத்தின் அடிப்படை செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வகிப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை வழங்கியுள்ளது.

பிரதான செயற்பாடுகள்

- தனியார் மற்றும் சங்கங்கள் கூட்டிணைத்தல். உத்தரவாத்ததினால் வரையறுக்கப்பட்ட, வரையறுக்கப்படாத, வெளிநாட்டு, பொது,
- கணக்காய்வாளர்கள், கம்பனிச் செயலாளர்கள் பதிவு செய்தல்
- சங்கங்கள் மற்றும் பொது ஒப்பந்தங்களுக்கான விபரங்களை பதிவு செய்தல்
- அடகு பத்திரம் மற்றும் கடன்பத்திரம் பதிவு செய்தல்
- கம்பனிகள் மீள்பதிவு செய்தல்
- கம்பனிகளை மூடுதல் மற்றும் களைத்தல்
- கம்பனிகள் / சங்கங்கள் தொடர்பிலான சகல தகவல்களையும் இற்றைப்படுத்தல்
- உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதல், பொது மக்களுக்கான தகவல்களை வழங்குதல்
- ஆவணங்களை உறுதிப்படுத்தல்
- கட்டணங்களை சேகரித்தல மற்றும் சரிபார்த்தல்
- மெய் ஆவணங்கள் மற்றும் கோவைகளை பராமரித்தல் மற்றும் முகாமைப்படுத்தல்
- அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அவசியமான தகவல்கள், உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் உதவி வழங்குதல்



1.4 திணைக்களத்தின் நிர்வாக மற்றும் சிரேட்ட அலுவலர் குழு

திரு.சஞ்சீவ திசாநாயக்க
கம்பனிகள் பதிவாளர் நாயகம்

திருமதி.எல்.தஹநாயக்க
பிரதான கணக்காளர்

திருமதி.ஜெயவானி சுசாந்தகுமார்
பிரதான உள்ளக கணக்காய்வாளர்

திருமதி.பீ.பீ.ஷியாமா ஹர்ஷனி
கம்பனிகள் பதிவாளர்

திருமதி.எல்.கே.எஸ்.தர்மகீர்த்தி
கம்பனிகள் பதிவாளர்

திரு.பீ.எஸ்.டி.தரங்க பண்டித சுந்தர
பிரதி கம்பனிகள் பதிவாளர்

திரு.கே.எச்.ஷேன் ஸ்ரீ நிலுஷ டி சில்வா
உதவி கம்பனிகள் பதிவாளர்

திரு.ஆர்.ஆர்.எஸ்.சீ.ரத்நாயக்க
உதவி கம்பனிகள் பதிவாளர்

திரு.எம்.டி.எச்.எஸ்.மதுகமகே
உதவி கம்பனிகள் பதிவாளர் / அதிகாரபூர்வ பெறுநர் (மே.பா)


திரு.ஜீ.எம்.எஸ்.புஷ்பகுமார்
புள்ளிவிபரவியலாளர்

திரு.எஸ்.கே.மல்லவதந்த்ரி
நிர்வாக உத்தியோகத்தர்

திரு.டி.டி.ரத்னசேகர
மொழி பெயர்ப்பாளர்

திரு.டப்ளியு.எம்.கயான் குமார
தகவல் தொழினுட்ப அலுவலர்

1.4. நிறுவன கட்டமைப்பு



1. ICTO Officer	– Information & Communication Technology
2. DO	– Development Officer
3. CIO	– Companies Inspector Officers
4.MSO	–Management Service Officer
5. ICTA Assistant	– Information & Communication Technology
6.OES	– Office Employees Service

1.5 திணைக்களத்தின் பிரிவுகள்

1. தகவல் வழங்கும் பிரிவு
2. பெயர்களை அனுமதித்தல்
3. புதிய கம்பனிகளை கூட்டிணைக்கும் பிரிவு
4. கம்பனிகளின் தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் ஆவணங்களை பதிவு செய்தல் பிரிவு
5. உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்கும் பிரிவு
6. முடிவுறுத்தும் பிரிவு
7. மீள்பதிவு பிரிவு
8. சங்கங்களை பதிவு செய்யும் பிரிவு
9. கம்பனிகள் செயலாளர் மற்றும் கணக்காய்வாரள்களை பதிவு செய்யும் பிரிவு
10. பொது ஒப்பந்தங்கள் பிரிவு
11. பதிவேட்டறை மற்றும் விசாரணைகள் பிரிவு
12. கம்பனிகள் பரிசோதகர் பிரவு
13. தாபனப் பிரிவு
14. கணக்குப் பிரிவு
15. உள்ளக கணக்காய்வு பிரிவு
16. தபால் பிரிவு
17. தகவல் தொழில்நுட்ப பிரிவு
18. அதிகாரப்பூர்வ பெறுநர் பிரிவு

i. தகவல் வழங்கும் பிரிவு

பயனாளர் விசாரணைகள் தொடர்பில் விரைந்து பதில் வழங்கும் திறமையுள்ள நன்கு பயிற்றப்பட்ட அனுபவம் நிறைந்த உத்தியோகத்தர் இப்பிரிவில் சேவை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார். திணைக்களம் மற்றும் தொடர்புபட்ட மக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல் மற்றும் வழிகாட்டுதல் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் மூலம் மக்களுக்கு திணைக்கள சேவைகளை வழங்குவதை இலகுபடுத்துதல். அத்தோடு பயனாளர்களால் சமர்பிக்கப்படும் ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்டு உரிய பிரிவுகளுக்கு வழங்குவது இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.


ii. கம்பனி பெயர் அனுமதித்தல்

ஒரு கம்பனி பெயரை பதிவு செய்வதற்காக விண்ணப்பித்ததன் பின்னர், அப் பெயரை தரவுத்தளத்தில் சரி பார்த்து, அப் பெயரானது அனுமதி பெறுவதற்கான கம்பனிகள் சட்டதிட்டங்களிற்கு உட்பட்டுள்ளதாவென அறிக்கையிடுவது, பொது மக்களுக்கு, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கம்பனிகள் தொடர்பில் தகவல்களை வழங்கவதற்கு உதவி புரிதல், கம்பனிக்கான பதிவு இலக்கம் வழங்குவது மற்றும் குறித்த பெயரில் தற்போது கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாவென அறிக்கைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

iii. புதிய கம்பனிகளை கூட்டிணைக்கும் பிரிவு

கம்பனிகள் கூட்டிணைப்பதற்காக இணையவழி மூலம் பெறப்படும் விண்ணப்பங்களை சரிபார்த்து பிழையற்ற விண்ணப்பங்களை பதிவு செய்வதற்கு முன்வைத்தல் மற்றும் தவறுகளுடன் பெறப்படும் விண்ணப்பங்களின் குறைபாடுகளை உரிய பிரிவினருக்கு அறிவுருத்தல், அது தொடர்பாக பொதுமக்களிற்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதல், திருத்தியனுப்பப்பட்ட விண்ணப்பங்களை பரீட்சித்து சரியாயின் பதிவு செய்வதற்காக முன்வைத்தல்,

விபரம்	தொகை		
	2019	2020	2021
பெயர் அனுமதிக்காக முன் வைக்கப்பட்ட விண்ணப்பங்கள்	16,967	18,412	26,534
அனுமதிக்கப்பட்ட தொகை	12,184	17,653	26,180
செயற்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள்	05	834	0
நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் தொகை	4,308	4	20



iv. கம்பனிகளின் தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் ஆவணங்களை பதிவு செய்தல் பிரிவு

ஆவணங்களை பதிவுசெய்தல், ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்கல் என்பன திணைக்களத்தின் பிரதான செயற்பாடாகும். அவை A, B, C, D மற்றும் E என 5 பிரிவுகளின் கீழ் நடைபெறுவதுடன் A மற்றும் B பிரிவுகளினால் படிவம் 15 தொடர்பாகவும் C பிரிவினால் படிவம் 20 தொடர்பாகவும் D பிரிவினால் படிவங்கள் 6,8 மற்றும் 9 தொடர்பாகவும் E பிரிவினால் படிவங்கள் 13, 14, 17, 39 தொடர்பாகவும் மற்றும் கம்பனிகளை ஒருங்கிணைத்தல், கம்பனிகளின் பெயர்களை மாற்றுதல், உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள், கரைகடந்த கம்பனிகள் மற்றும் வெளிநாட்டு கம்பனிகள் தொடர்பாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

v. உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் வழங்கும் பிரிவு

கம்பனிகளுக்கு உரிய சேவை பெறுநர்களினால் விண்ணப்பிக்கப்படும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. பொதுமக்களுக்கு வினைத்திறன் மற்றும் துரித சேவையினை வழங்குவதை நோக்காக கொண்டு கம்பனிகளுக்கு உரிய பதிவு செய்யப்பட்ட சகல ஆவணங்களினதும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதல்.

vi. முடிவுறுத்தும் பிரிவு

இப்பிரிவினால் கம்பனிகளின் பெயர்களை நீக்குதல் மற்றும் கம்பனிகளை கலைத்தல் தொடர்பாக பின்வரும் முறைகளில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

1. 2007 ஆம் ஆண்டு 394 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 07ஆம் பிரிவின் கீழ் பெயரை நீக்குதல்.
   - சொத்துக்கள், பொறுப்புக்கள் அற்ற கம்பனிகளின் பெயர்களை நீக்குதல்.

இதன் போது கம்பனியின் சகல பணிப்பாளர்களினதும் மற்றும் பணிப்பாளர்கள் அற்ற பங்காளர்களினதும் சத்தியக்கடதாசி மற்றும் வேண்டுதல் கடிதங்களை பெற்றுக்கொள்வதுடன் அச் சத்தியக்கடதாசி தொடர்பான கட்டளைகளை பெற்றுக்கொள்வதற்காக முன்வைத்தல். அதன் பின்னர் கம்பனிகள் 9 (கம்பனிக்கு) மற்றும் வருமானவரி ஆணையாளரிற்கு விசாரணைக்கடிதம் தயாரிப்பதுடன் அக் கடிதங்களிற்கு ஒரு மாதமும் 10 தினங்களுக்குள் கம்பனிகள் 10 மற்றும் கம்பனிகன் 04 கடிதம் தயாரிக்கப்படுகின்றது. வருமானவரித் திணைக்களத்தினால் கம்பனியின் பெயரை நீக்குவதற்கு மறுதளிப்பு இல்லையென தகவல் கிடைக்கப்பெற்றதன் பின்னர் 3 மொழிகளிலும் வர்த்தமானி அறிவித்தலை தயாரிப்பதுடன் அவ்வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 3 மாதங்களின் பின்னர் பெயர் நீக்கம் செய்யப்படுகின்றது.

வருமானவரித் திணைக்களத்தினால் மறுதளிப்பு உள்ளதென கிடைக்கப்பெற்ற கம்பனிகள் தொடர்பாக அக்கம்பனிகளுக்கான தெரியப்படுத்தி அவ் மறுதளிப்பு முடிவடையும் வரை கம்பனிகளை முடிவுறுத்தல் இடைநிறுத்தப்படும்.

- ஆண்டறிக்கை சமர்பிக்கப்படாத கம்பனிகள் தொடர்பில் அக் கம்பனிகளுக்கு தெரியப்படுத்துவதுடன் அதற்குரிய மறுமொழி வழங்கப்படாதிருப்பின் மற்றும் வருமானவரி ஆணையாளரின் மறுதளிப்பு இல்லையெனின் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 ஆம் பிரிவின் கீழ் அக் கம்பனிகளின் பெயர்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2. சொத்துக்கள் பொறுப்புக்கள் காணப்படும் கம்பனிகள் தொடர்பாக கலைப்பான் ஒருவர் நியமிக்கப்பட்டு
   - உறுப்பினர்களின் தன்னார்வத்தின்படி
   - கடன்பட்டோரின் தன்னார்வத்தின்படி
   - நீதிமன்ற கட்டளையின்படி

ஆகிய மூன்று முறைமைகளில் ஒரு முறைமையின் கீழ் கம்பனி கலைக்கப்படுகின்றது. இதன்போது சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் பதிவுசெய்யப்படுவதுடன் கடைசி ஆவணம் பதிவு செய்யப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் கம்பனி கலைக்கப்படுகின்றது. நீதிமன்ற கட்டளையின்படி கண்க்குப்பார்க்கப்பட்டு கலைக்கப்படும்போது இறுதி நீதிமன்றக் கட்டளை பதிவுசெய்யப்பட்ட பின்னர் கலைக்கப்படுகின்றது.

3. கம்பனிகள் ஒருங்கிணைக்கப்பட்ட பின்னர் கம்பனியின் பெயரை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.


4. கம்பனிகளின் பெயர் நீக்கப்பட்டுள்ளதாவென பரீட்சிக்க வரும் பயனாளிகளுக்கு வேண்டுதல் கடிதம் தொடர்பான ஆவணங்களை வழங்குதல்.

5. தற்போது இணையவழி மூலம் பெயரை நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

6. மேலும் பெயரை நீக்குவதற்கான சத்தியக் கடதாசி முன்வைக்கப்பட்டதன் பின்னர் அக் கம்பனி தொடர்ந்தும் நடாத்திச்செல்வதற்கு தேவை ஏற்படின் அக் கம்பனிகளிடமிருந்து சத்தியக் கடதாசிகளை பெற்றுக்கொண்டு பெயரை நீக்குவதற்கான கட்டளையை நீக்குதல் மற்றும் அது தொடர்பான கடிதங்களை தயாரித்தல்.

கலைக்கப்பட்ட மற்றும் செல்லுபடியற்றதாக்கப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை (2021.12.31 வரை)


	2018	2019	2020	2021
அங்கத்தவர்கள் தன்னார்வத்தில் முடிவுறுத்தல்	52	43	21	09
கடன்கொடுத்தோர் தன்னார்வத்தில் முடிவுறுத்தல்	11	09	05	06
நீதிமன்றத்தின் மூலம் ஒடுக்கல்	04	06	01	03
கம்பனிகள் சட்டத்தின் 394 ஆம் பிரிவின் கீழ் நீக்கப்படல்	332	381	210	209
ஒன்றிணைத்தல் காரணமாக பெயரை நீக்குதல்	74	46	29	15
வெளிநாட்டுக் கம்பனிகளின் பெயரை நீக்குதல்	0	0	0	13
மொத்தம்	**473**	**485**	**266**	**255**



vii. மீள்பதிவு பிரிவு

இப்பிரிவானது, கம்பனிகளை மீள் பதிசெய்வதற்காக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் அறிமுகத்துடன் 2007 ஆம் ஆண்டு மே மாதத்தில் தாபிக்கப்பட்டதுடன், இப்பிரிவு ஒரு உதவி கம்பனிகள் பதிவாளரின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது 2007ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் 31.12.2021 ஆம் திகதிவரை மீள் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை 25,077 ஆகும்.


கம்பனி வகை ஆண்டு	வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி (PV)	வரையறுக்கப்பட்ட பொது கம்பனி (PB)	பொது பட்டியலிட்ட கம்பனி (PQ)	உத்தரவாத கம்பனி (GA)	உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி 2(GL)	வரையறுக்கப்படாத கம்பனி (UC)	மொத்தம்
2013	24	4	0	7	0	0	35
2014	14	0	0	3	1	0	18
2015	4	0	1	0	0	0	5
2016	1	1	0	1	0	0	3
2017	2	0	0	0	0	0	2
2018	3	0	0	0	0	0	3
2019	2	1	0	0	0	0	3
2020	0	0	0	0	0	0	0
2021	0	0	0	0	0	0	0



viii. சங்கங்களை பதிவு செய்யும் பிரிவு

சங்கங்கங்கள் கட்டளைச்சட்டம் 123 ஆம் பிரிவின் கீழ் நாடளவியரீதியில் சங்கங்களை பதிவு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்திச் செல்லல் இப் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது. 31.12.2021 ஆம் திகதி வரை பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 16,196 ஆகும்.

சங்க வகைகள்	2016	2017	2018	2019	2020	2021
விகாரஸ்தான	21	16	18	06	01	-
சர்வோதய	-	-	-	-	-	-
மித்துரு சங்வர்தன	83	48	09	-	-	-
இசுரு சங்வர்தன	-	-	-	-	-	-
மகளிர் சமிதி	-	-	-	-	-	-
கிராமிய சங்சர்தன	-	-	-	-	-	-
கிராமசக்தி	-	-	1037	2431	98	01
நீர்					09	01
ஏனைய(நலன்புரி)	21	15	22	18	32	29
பதிவு செய்வதற்குள்ள	-	-	-	-	-	01
மொத்தம்	125	79	1086	2455	140	32




ix. கம்பனிகள் செயலாளர் மற்றும் கணக்காய்வாரள்களை பதிவு செய்யும் பிரிவு

1987 கம்பனிகள் கட்டளை சட்டத்தின் கீழ் உரிய தகைமையினை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பத்தாரிகள் கம்பனிகள் செளலாளர்களாக பதிவு செய்தல் மற்றும் 1964 கம்பனிகள் கணக்காய்வாரள் கட்டளை சட்டத்தின் கீழ் உரிய தகைமையினை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பத்தாரிகள் கம்பனிகள் கணக்காய்வாளர்களாக பதிவு செய்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. 31.12.2021 ஆம் திகதிக்கு 779 கம்பனிகள் செயலாளர்களும் 359 கணக்காய்வாளர்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கம்பனிகள் செயலாளர் மற்றும் கணக்காய்வாரள்களை பதிவு செய்தல்

வருடம்	கணக்காய்வாளர்	செயலாளர்கள்
2016	29	680
2017	26	817
2018	20	815
2019	11	264
2020	315	641
2021	359	779




x. பொது ஒப்பந்தங்களை (டெண்டர்) பதிவுசெய்தல்


1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் 05 மில்லியனுக்கும் கூடிய ஒப்பந்தங்கள் தொடர்பாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் போது ஒப்பந்தக்காரர் அல்லது அவர் சார்பாக முகவர், துணை முகவர், முகவரின் அல்லது அவரின் பெயரில் பதிவுசெய்யும், புதுப்பிக்கும் மற்றும் பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டத்தின் கீழ் ஒப்பந்தங்கள் பதிவு செய்தல், புதுப்பித்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

பொது ஒப்பந்தங்களை பதிவுசெய்தல்

ஆண்டு	எண்ணிக்கை	வருமானம் (ரூ)
2016	17875	29,949,500.00
2017	19275	31,174,500.00
2018	24743	39,502,500.00
2019	23932	41,895,000.00
2020	19233	44,608,336.00
2021	22445	50,344,000.00



வருடாந்தம் பதிவு செய்யப்பட்ட பொது ஒப்பந்தங்களினாலான வருமானம் (ரூ)



X

xi. பதிவேட்டறை மற்றும் விசாரணைகள் பிரிவு

கம்பனிகள் மற்றும் சங்கங்களின் மெய் ஆவணங்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல், அவசியமான வேளைகளில் அலுவலர்களுக்கும் மற்றும் மேற்பார்வையின் கீழ் பொதுமக்களுக்கு பரீட்ச்சித்துப்பார்ப்பதற்கு வழங்குதல், மீண்டும் உரிய முறையில் அக் கோவைகளை பெற்றுக்கொள்ளுதல் பதிவேட்டறையினால் மேற்கொள்ளப்படுகிறது.
கட்டணம் செலுத்தியதன் பின்னர் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் கம்பனிகளின் கோவை மற்றும் சங்கங்களின் கோவை மெய்யாக பரீட்சித்துப் பார்ப்பதற்காக பொதுமக்களுக்கு விசாரணைகூடத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது.
தினமும் பதிவேட்டறையினுள் கோவைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதினால் திணைக்கள முறைமையினை திணைக்கள முறைமியினை கணனிமயப்படுத்தும் தேவை பதிவேட்டறைக்கு முக்கியமாகவுள்ளது.

xii. கம்பனிகள் பரிசோதகர் பிரிவு

இப் பிரிவின் நடவடிக்கைகள் தொடர்பாக கம்பனி பரிசோதகர்கள் 8 பேர் 2021 ஆம் ஆண்டின் உள்வாங்கப்பட்டுள்ளனர். எனினும் கம்பனிகள் பரிசோதகர்கள் 2 பேர் வேறு தொழிலிற்காக சேவையிலிருந்து இடைவிலகியுள்ளதனால் 31.12.2021 ஆம் திகதிக்கு கம்பனி பரிசோதகர்கள் 6 பேர் சேவைபுரிகின்றனர். கம்பனிகள் பரிசோதகர் பிரிவின் செயற்பாடுகள் பின்வருமாறு,

- கம்பனிகள் சட்டத்தின் விரோதமாக செயற்படும் கம்பனிகளுக்கு மற்றும் பணிப்பாளர்களுக்கு கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் கட்டளையின் கீழ் வழக்குத்தொடுத்தல் மற்றும் அவ்வாறு தொடுக்கப்பட்ட வழக்குகளுக்கு கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு பதிலாக நீதி மன்றத்தில் சமூகமளித்தல்.
- நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்குகளுக்கு கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு பதிலாக சமூகமளித்தல்.
- கம்பனி பதிவாளர் நாயகத்தின் கட்டளையின் கீழ் கம்பனிகளுக்குச் சென்று ஆவணங்களை பரீட்சித்தல் மற்றும் இடவியல் சோதனை செய்தல்.
- கம்பனி பதிவாளர் நாயகத்தின் கட்டளையின் கீழ் ஏனைய அரச நிறுவனங்களுக்கு மற்றும் விசாரணைகளுக்காக தேவையான ஆவணங்களை வழங்குதல், அறிக்கைகளை வழங்குதல் மற்றும் உதவுதல்.

xiii. தாபனப் பிரிவு

திணைக்களத்தின் நிர்வாக செயற்பாடுகள் முறையாகவும் சீராகவும் இடம்பெறுவதற்காக இப்பிரிவு தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மேற்பார்வை நடவடிக்கைகள் கம்பனிகள் பதிவாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தரினால் நடைபெறுகிறது.

xiv. கணக்குப் பிரிவு

திணைக்களத்தின் நிதி மற்றும் கணக்கியல் நடவடிக்கைகள் இப் பிரிவின் கீழ் நடைபெறுவதுடன் அது பிரதான கணக்காளரின் மேற்பார்வையின் கீழ இடம்பெறுகின்றது.

xv. உள்ளக கணக்காய்வு பிரிவு

உள்ளக நிர்வாக முறைமையினை ஒழுங்குப்படுத்துவதற்கு கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் திணைக்களத்தினுள் இப் பிரிவு தாபிக்கப்பட்டதுடன் முதலாம் தர கணக்காளர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் அந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

xvi. தபால் பிரிவு

திணைக்களத்திற்கு கிடைக்கப்பெறும் கடித ஆவணங்களை பெற்றுக்கொள்ளுதல் உரிய பிரிவுகளுக்கு வழங்குதல் திணைக்களத்திலிருந்து வெளிச்செல்லும் கடித ஆவணங்கள் தொடர்பான நடவடிக்கை இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

xvii. தகவல் தொழில்நுட்ப பிரிவு

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பிரதான பிரிவுகளுக்கிடையே இன்னுமொரு முக்கிய தொழிலினை மேற்கொள்ளும் பிரதான பிரிவாக தகவல் தொழில்நுட்ப பிரிவு காணப்படுகிறது. (தகவல் தொழில்நுட்ப சேவையின் உதவி பணிப்பாளரின் தலமையின் கீழ் இப் பிரிவின் நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.)

இப் பிரிவின் கடமைகளானது, இத் திணைக்களத்தினால் செய்யப்படுகின்ற முக்கிய விடயமான நாடளாவியரீதியில் கம்பனிகளை பதிவு செய்யும் நடவடிக்கைகளை கோவைகள் முன்னிலைப்படுத்தப்பட்ட மனிதவலுவினால் (Manual Process) செய்யப்படும் முறைமைக்குப் பதிலாக இணையவழி கணனிமுறைமையினை "eRoc Online Process" அறிமுகப்படுத்தப்படுவதினால் மிகவும் பரவலாக நடைமுறைப்படுப்படுத்தப்படுகிறது. இவ் விசேடத்திட்டம் 2018 ஏப்ரல் மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதுடன் இதுவரை நடைமுறையில் காணப்பட்ட செய்முறைச் சிக்கலை கண்டறிந்து அவற்றிற்கு உடனடி தீர்வினை வழங்குவதற்கும் இக் கம்பனிகளைப் பதிவு செய்யும் நடைமுறையானது மிகவும் குறுகிய காலத்தினுள் வினைத்திறன்மிக்க மற்றும் பயனுள்ள முறையில் வாடிக்கையாளர்களை முன்னுரிமைப்படுத்திய (Client Oriented) திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் இத் தகவல்கள் தொழில்நுட்பப் பிரிவினூடாக பல்வேறுபட்ட படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட படிமுறைகளில் விசேடமானவை சில கீழ்வருமாறு.

- பயனர் நட்பு (User Friendly) நடைமுறையை அறிமுகப்படுத்தல்.
- கம்பனிகள் பதிவு செய்யும் நடைமுறைக்காக செலவிடப்படும் காலத்தினை குறைத்தல்.
- உரிய கட்டணங்களை செலுத்துவதற்கு இணையத்தினூடான வசதிகளை வழங்கல்.
- இதுவரை தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு பதிலாக, தாம் பதிவேற்றிய தகவலுக்கமைய சுயமான (System Generated Applications) விண்ணப்பம் மற்றும் அவற்றிற்குரிய படிவங்களை தாயாரித்துக் கொள்ள கூடியதாயிருத்தல்.
- பாவணையாளர்களுக்கிடையில் தாம் பதிவு செய்துகொண்ட நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை தமக்கு தேவைப்படும் நேரங்களில் தேவையான இடத்திலிருந்து தமது பயனர் உள்நுழைவு தகவலை (User Login Details) உபயோகித்து கணனியொன்றினை உபயோகித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.
- கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்கு பதிவு நடவடிக்கைகளுக்காக வருகை தரும் வாடிக்கையாளர்களுக்காக கணனி பயன்படுத்தும் வசதியினை தகவல் தொழில்நுட்ப பிரிவினுள் செய்துகொடுக்கப்பட்டுள்ளது.
- தேவையான சந்தர்பத்தில் eRoc Online Process தொடர்பாக தகவல்கள் மற்றும் அறிவுரைகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர்களுக்கு தேவையான சந்தர்ப்பத்தில் தொழில்நுட்ப அறிவுரைகள் வழங்குவதற்கு இந்த பிரிவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர்களுக்கு அறிவுருத்தல் வேலைத்திட்டம் அடிக்கடி மேற்கொள்ளல்.

எவ்வாறாயினும் திணைக்களத்திற்கு அனுமதிக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவையின் பணிப்பாளர் பதவி, உதவி பணிப்பாளர் பதவி 2, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் பதவி 2 மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் பதவி 3 ஆகியவற்றுக்கான வெற்றிடம் காணப்படுவதன் காரணமாக eRoc Online Process (இணையவழி முறைமை) வெற்றிகரமாக தொடர்ந்து நடத்திச் செல்வதில் அதிக சவாலாக உள்ளது.

1.6 கம்பனிகள் நிதியம்

2007 ஆம் ஆண்டு கம்பனிகள் சட்டத்தின் 479 ஆம் இலக்க பிரிவின் கீழ் கம்பனிகள் நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் உடன்பாட்டுடன் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி விடய பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளதற்கேற்ப இந்நிதியம் செயற்படுத்தப்படுகிறது. பதிவாளர் நாயகத்தினால் இச்சட்டத்தின் கீழான பரிந்துரைக்கேற்ப விதிக்கப்பட்ட அல்லது வசூலிக்கப்பட்ட அனைத்து கட்டணங்களில் அல்லது கழிப்பனவுகளில் இரண்டு பங்கு (2/3) கம்பனிகள் நிதியத்திற்கு செலுத்துததல் வேண்டும். இச்சட்டத்தின் கீழ் தமது அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும் போது பதிவாளர் நாயகத்தினால் தாங்ககூடிய எந்தவொரு செலவினையும் அடைப்பதற்கான சகல நிதியும் இந்நிதியத்தினால் செலுத்தப்டல் வேண்டும்.

02. முன்னேற்றங்களும் எதிர்கால இலக்குகளும்

2.1 விசேடவெற்றி

- ❖ e-Roc திட்டத்தின் முழுமையான இணையவழியூடாக சேவை வழங்குவதனால் வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்குவதற்கு திணைக்களத்திற்கு முடியுமாகயிருந்த்து. அவ்வாறே வாடிக்கையாளர்களுக்கு அதன் மூலம் தேவையான சேவைகளை செய்து கொள்வதற்கு பரந்த பிரயோகத்தினை பெறக்கூடியதாகவுள்ளது. உலகத்தின் எந்த இடத்திலிருந்தும் எங்களுடைய வாடிக்கையாளர்களிற்கு எமது திணைக்களத்துடன் தொடர்புபட்ட சேவையினை உடனடியாக e-Roc இணையவழியூடாக விண்ணப்பிக் முடியும். விசேடமாக இவ் வருடம் முழுவதும் உலகவாசிகள் யாவரும் முகம்கொடுத்த Covid 19 நோய்த்தொற்று காரணமாக சுகாதார பாதுகாப்பு கொள்கையின் கீழ் மக்கள் நடமாட்டம் வரையறுக்கப்பட்டது. எனினும் e-Roc இணையவழியில் எமது வாடிக்கையாளர் தமது சேவையினை பெற்றுக்கொள்வதில் தடைகள் எதுவும் ஏற்படவில்லை. 2021 ஆம் ஆண்டின் கம்பனிகளின் கூட்டிணைப்பு 26 சதவீத்திலும், கம்பனிச் செயலாளர்கள் பதிவு 18 சதவீத்திலும், கம்பனிகள் கணக்காய்வாளர் பதிவு 12 சதவீத்திலும், பொது ஒப்பந்த பதிவு 14 சதவீதத்திலும் வளர்ச்சியடைந்து ஊன்றுகோளாகிறது.

- ❖ அவ்வாறே Covid 19 காரணமாக இவ்வருடம் முழுவதும் இடைக்கிடையில் நாடு மூடப்பட்டு நடமாட்டம் மட்டுப்படுத்தப்பட்டது. விசேடமாக வருடத்தின் அதிகமான காலப்பகுதி மாகாணங்களுக்கிடையில் பயணம் செய்வது தடைசெய்யப்பட்டிருந்த்து. எமது பணிக்குழுவின் 50 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் மேல்மாகாணத்தில் அல்லாமல் வெளி பிரதேசங்களில் வசிப்பவர்களாயினும் மேற்குறித்த காலப்பகுதியில் எமது சேவை தடைப்படவில்லை. எமது பணிக்குழு நாடு மூடப்பட்டிருந்த காலப்பகுதியிலும் அர்ப்பணிப்புடன் வீட்டிலிருந்தவாறு இணையவழியூனூடாக கடமையினை மேற்கொண்டு அதிக செயற்றிறனை அறிக்கை செய்துள்ளார்கள். அதாவது, இவ்வருட கம்பனிகள் பதிவாளரின் உண்மை வருமானம் மதிப்பிடப்பட்ட வருவாயில் 104 சதவீதத்தையும், பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் ஆண்டுக்கான உண்மையான வருவானம் மதிப்பிடப்பட்ட வருவாயில் 112 சதவீதத்தையும் ஈட்ட முடிந்ததுடன் இது போன்ற அவசரநிலைகளிலும் எமது திணைக்களம் உயர் செயல்திறனைக் காட்டுகிறது.

- ❖ வாடிக்கையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் இனிமையான சூழலுடன் கூடிய திணைக்களக் கட்டிடத்தின் கீழ்த்தளத்தனை சீரமைப்புப் பணிகளை நிறைவு செய்ய முடிந்த்து. திணைக்களத்திற்கு வரும் எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் சேவைகள் முடியும் வரை காத்திருந்து அவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி அவர்களுக்கு இன்பமான சேவையை வழங்குவது எமக்கு கிடைத்த மாபெரும் சாதனையாகும்.

செயல்பாடுகள் தினந்தோறும் அதிகரித்தவண்ணம் இருப்பதால் அச்செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனிகள் பரிசோதகர்களை நியமிப்பது நீண்டகாலமாக திணைக்களத்திற்கு அவசியமாகியிருந்து. அதற்கமைய இவ்வருடம் கம்பனிகள் பரிசோதகர் 8 பேர் நியமிக்கப்பட்டு கம்பனிகள் பரிசோதனைகள் பிரிவினை விரிவுபடுத்தக்கூடியதாகவிருந்து எமது வெற்றியாகும்.

2.2 சவால்கள்

- e-Roc திட்டத்திற்கமைய இணையவழி மூலமாக திணைக்களத்தின் பிரதான சேவைகள் வழங்கப்படுவதால் அவ் வேலைத்திட்டத்தினை சீராக்குவதற்கும் இற்றைப்படுத்துவதற்கும் தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அப் பிரிவிற்கு தகவல் மற்றும் தொழில்நுட்ப பிரிவு சேவை பணிப்பாளர் ஒருவர், உதவிப் பணிப்பாளர் இருவர், தகவல் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் 3 பேர் மற்றும் தகவல் மற்றும் தொழில்நுட்ப உதிவியாளர் 6 பேர் கொண்ட பணியாளர் குழுவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனினும் அப் பிரிவின் செயற்பாடுகளிற்கு தகவல் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் மற்றும் தகவல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் 3 பேர் மாத்திரம் காணப்படுவதால் e-Roc திட்டத்தினை தொடர்ச்சியாக மேற்கொள்வது சவாலாக காணப்படுகிறது.
- திணைக்களத்தில் அனுமதிக்கப்பட்ட பணிக்குழுவின் வெற்றிடம் குறிப்பிடப்படும் அளவில் காணப்படுவதால் அவற்றை பூரணப்படுத்தி சேவைக்கு பொருத்தமான வகையில் அலுவலர்களை பயிற்சிசெய்வித்து உயரிய சேவைய வழங்குவதும் அச் சேவைகளை விரிவுபடுத்துவது எமது இன்னொரு சவாலாகும்.
- தற்போது காணப்படும் செயற்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் தகவல் மற்றும் தொழில்நுட்ப பிரிவினை விரிவுபடுத்துவது மற்றும் பயிற்சி செய்வது.

2.3 எதிர்கால இலக்கு

- திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் சகல காரியங்களும் இணையவழியூடாக ஆகக் குறைந்த காலத்தினுள் செய்து கொடுப்பதற்கு வினைத்திறன்மிக்க மக்கள் சேவையினை வழங்குவதற்கு அவசியமான செயற்றிட்டத்தை மேற்கொள்ளல் மற்றும் விரிவுபடுத்தல்.
- வியாபார நிறுவனங்களுக்கு மற்றும் முயற்சியாளர்களுக்கு சுமூகமான மற்றும் இலகுவான சூழலை ஏற்படுத்தல், முதலீட்டாளர்களுக்கு ஆக்கபூர்வமான சேவையினை வழங்கி உயரிய வணிக சமூகத்தை உருவாக்குவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு சக்தி அளித்தல் எனும் இலக்கை அடைவதற்கு எமது திணைக்களம் எதிர்நோக்கும் சவால்களை வெற்றிபெற்று எதிர்வரும் வருடங்களுக்கு முகம்கொடுத்தலும் எமது திட்டமாகும்.

சஞ்சீவ திசாநாயக்க
கம்பனிகள் பதிவாளர் நாயகம்

SANJEEWA DISSANAYAKE
Registrar General Of Companies
Department Of The Registrar Of Companies
" Samagam Medura "
400, D.R. Wijewardena Mawatha,
Colombo - 10.

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட
கம்பனிகள் நிதியம் 2021.12.31 ஆம் திகதிய ஐந்தொகை

	குறிப்பு	2021.12.31	2021.12.31
		(Rs.)	(Rs.)
சொத்துக்கள்			
நடைமுறை சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்கு நிகரானவை	9	51,585,296	28,559,027
கிடைக்கவேண்டிய வருமானம்	10	5,540,329	4,117,608
காகிதாதிகள்	11	3,177,551	
முற்பணக் கொடுப்பனவுகள்	12	598,023	439,870
பாதுகாப்புச் சேவை உத்தரவாத வைப்பு		25,000	25,000
மூலதனம் - திறைசேரி பட்டியல்			32,763,191
பெறவேண்டிய திறைசேரி உண்டியல் வட்டி	13	13,053,600	18,309,043
பெறவேண்டிய திறைசேரி பட்டியல் வட்டி			372,631
திறைசெயலாளிடமிருந்து பெறப்படவேண்டிய நிதி	14	654,116	587,075
		74,633,915	85,173,444
நிலையான சொத்துக்கள்			
பங்கு மூலதனம்		90,275,000	90,275,000
சொத்துப் பகுதிகள் மற்றும் உபகரணங்கள்	15	326,850,542	330,766,008
நடைமுறை வேலை கணக்குகள்	16	233,467,318	130,413,915
திறைசேரி செயலாளரின் முற்பணம்	17	4,899,899,962	5,019,566,832
மூலதனம் - திறைசேரி பங்குகள்	18	1,283,266,000	818,477,000
மூலதனம் - திறைசேரி பங்குகள்(திரவ)	19	43,666,289	
		6,877,425,112	6,389,498,755
மொத்த சொத்துக்கள்		6,952,059,026	6,474,672,199
பொறுப்புக்கள்			
நடைமுறை பொறுப்புக்கள்			
தி.செ. செலுத்த வேண்டிய நிதி	20	1,311,373	1,174,150
தே.வ.திணைக்களத்திற்கு செலுத்தவேண்டிய வெட்	21	320,136	278,796
செலுத்தவேண்டிய வட்டி - கலைத்தல்	22	17,900,857	
அட்டுறு செலவுகள்	23	16,618,295	5,047,009
பொது வைப்புக் கணக்கு	24	3,538,834	8,265,108
கலைப்பாரது வைப்பு	25	29,989,953	
		69,679,449	14,765,063
நிலையான பொறுப்புக்கள்			
மொத்த பொறுப்புக்கள்		69,679,449	14,765,063
நிகர சொத்து		**6,882,379,578**	**6,459,907,137**
நிகர சொத்து/பொறுப்பு			
திரண்ட மேலதிகம்/பற்றாக்குறை	26	6,882,379,578	6,459,907,137
மொத்த நிகர சொத்து/பொறுப்பு		**6,882,379,578**	**6,459,907,137**

கம்பனிகள் நிதியம் - 2021.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான ஐந்தொகை

	குறிப்பு	2021	2020	2019
பெறுவனவுகள்				
கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் பெறுவனவுகள்	1	**478,671,525.39**	**448,266,309.25**	**437,891,762.01**
ஏனைய பெறுவனவுகள்		**70,974,635.20**	**183,300,141.26**	**355,655,341.73**
திறைசேரி பத்திர வட்டி	2	58,931,580.68	163,734,043.86	274,093,415.77
திறைசேரி பட்டியல் வட்டி	3	344,278.52	8,327,397.40	71,066,508.96
தி.சே.பட்டியல் - கலைத்தல் கட்டிட வாடகை	4	11,160,000.00	11,160,000.00	10,120,000.00
சிற்றுண்டிச்சாலை வாடகை			2000.00	12,000.00
ஏனைய பெறுவனவு	5	538,776.00	76,700.00	363,417.00
மொத்த பெறுவனவுகள்		**549,646,160.59**	**631,566,450.51**	**793,547,103.74**
செலவுகள்				
சம்பளம், ஏனைய மற்றும் சேவை இலாபங்கள்	6	(6,736,719.92)	(6,790,224.05)	(19,471,564.70)
வழங்கள் மற்றும் நுகர்வு பொருட்கள்	7	(114,190,576.29)	(89,123,510.57)	(62,036,873.88)
தேய்மானம்	8	(10,220,278.38)	(10,987,355.95)	(11,248,385.52)
ஏனைய செலவுகள்			(600.00)	(350.00)
மொத்த செலவுகள்		**(131,147,574.59)**	**(106,901,690.57)**	**(92,757,174.10)**
மேலதிகம்		**418,498.586.00**	**524,664,759.94**	**700,789,929.64**

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட
கம்பனிகள் நிதியம் 2021.12.31 ஆம் திகதியில்
முடிவடைந்த ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்கறிக்கை

	ரூ.	ரூ.
காசேட்டின் ஆரம்ப மீதி		
100153298050 இலக்க கணக்கு மீதி		28,559,027.00
100113298052 இலக்க கணக்கு மீதி		972,330.79
கூட்டு - ஆண்டிற்கான பெறுவனவு		
கம்பனி பதிவாளரின் பெறுகைகள் (காசு, காசோலை)-143100153298050	86,247,494.30	
கம்பனி பதிவாளரின் பெறுகைகள் (இணையம் - சம்பத் வங்கி)	255,233,684.59	
கம்பனி பதிவாளரின் பெறுகைகள் (இணையம் - நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி)	48,317,328.00	
கம்பனி பதிவாளரின் பெறுகைகள் (இலங்கை வங்கி)	389,594,042.40	
கம்பனி பதிவாளரின் பெறுகைகள் (நேரடி)	163,155.74	
பொது ஒப்பந்த பதிவாளரின் பெறுகை (வெட்)	24,480.00	
தி.பி.செ.கொடுப்பனவு - முற்பணம் ஈடு செய்தல்	119,599,828.44	
காசுக்கட்டளை வருமானம்	59,531.00	
கட்டிட வாடகை	10,230,000.00	
கலைக்கும் பிரிவிற்கான பெறுகைகள்	2,593,828.40	
தி.சே.பட்டியலிலான வட்டி (கம்பனிகள் கலைக்கும் கணக்கு)	6,541,206.00	
தி.சே.பட்டியல் முதிர்வு தொகை (கம்பனிகள் கலைக்கும் கணக்கு)	4,117,000.00	
தி.சே.பட்டியலிலான வட்டி	94,394,616.50	
தி.சே.பட்டியல் முதிர்வு தொகை	33,480,100.00	
ஏனைய வைப்புக்கள்	20,000,676.50	
ஏனைய வருமானம்	565,406.00	1,071,162,377.87
		1,100,693,735.66
கழி - நடப்பு ஆண்டுக்கான காசுக்கொடுப்பனவுகள்		
மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு	2,703,735.47	
பிரயாண செலவுகள் - உள்நாடு	20,348.20	
காகிதாதிகள் மற்றும் அலுவலக செலவுகள்	5,714,310.00	
எரிபொருள்	1,481,048.63	
சீருடைகள்	92,000.00	
மருத்துவ வழங்கல்	3,770.53	
ஏனையவை (1205)	737,427.99	
வாகன பராமரிப்பு	438,581.72	

பொறித் தொகுதிகள், சாதனங்கள் (பராமரிப்பு)	2,073,908.07	
கட்டிடங்கள் (பராமரிப்பு)	240,344.00	
போக்குவரத்து செலவுகள்	2,961,564.18	
தபால் மற்றும் தொடர்பாடல்கள்	11,961,441.01	
மின்சாரம் மற்றும் நீர்	10,940,130.35	
வரிபணம்	2,116,800.00	
ஏனையவை (1409)	68,975,418.79	
இயந்திரங்களும் இயந்திரசாதனங்களும் - முற்பணம்	428,000.00	
வாகன புணரமைப்பு	394,625.85	
தளபாடங்களும் அலுவலக சாதனங்களும்	193,138.00	
இயந்திரங்களும் இயந்திரசாதனங்களும்	3,364,450.00	
அலுவலர் பயிற்சி	257,250.00	
மீளமைப்பு	123,504,952.20	
தி.பி.செ கொடுப்பனவு - 20.03.02.10	239,359,190.04	
தி.பி.செ கொடுப்பனவு 10.03.07.08	330,000.00	
பெறுமதி சேர் கொடுப்பனவு - தே.வ.ஆணையாளர்	61,433,065.66	
திறைசேரி உண்டியல் முதலீடு	494,996,592.83	
திறைசேரி உண்டியல் முதலீடு (கம்பனி கலைப்பாரது கணக்கு)	9,999,844.38	
வருமானத்தில் மீளச்செலுத்துகை	111,101.61	
வைப்புகளில் மீளச்செலுத்துகை	4,275,400.48	1,049,108,439.99
காசேட்டின் இறுதி மீதி		
கணக்கு இலக்கம் 100153298050 இன் மீதி	47,360,774,86	
கணக்கு இலக்கம் 100153298052 இன் மீதி	4,224,520.81	51,585,295.67
		1,100,693,735.66

கம்பனிகள் நிதியம் - நிதி பிரவாக அறிக்கை (மறைமுக முறைகள்)

2021.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி பிரவாக அறிக்கை

	ரூ	ரூ
செயல்பாட்டு நடவடிக்கைலிருந்தான பணப்புழக்கம்		
வருமான செலவுக் கணக்கின் மேலதிகம்		418,498,586
சரிசெய்க		
தேய்மானம்	10,220,279	
வட்டி வருமானம்	(59,275,859)	
முந்தைய ஆண்டிற்கான சரிசெய்தல் (அட்டுறு செலவுகள்)	1,209,483	
முந்தைய ஆண்டிற்கான சரிசெய்தல்	(49,903)	
		(47,896,000)
		370,602,586
பணி மூலதன மாற்றம்		
முற்கொடுப்பனவு	(158,153)	
கிடைக்க வேண்டிய வருமானம்	(1,422,721)	
தே.வ.ஆ. செலுத்த வேண்டிய வெட்	41,341	
அட்டுரு செலவுகள்	11,571,287	
பொது வைப்புகள்	(4,726,274)	
தி.பி.செயலாளரின் முற்பணம்	137,224	
காகிதாதிகள்	(3,177,551)	2,265,154
நடைமுறையிலுள்ள காசு பெறுவனவுகளின் தேறிய நிதி		372,867,739
முதலீட்டு நடைமுறையிலுள்ள காசு பெறுவனவுகள்		
திறைசேரி பத்திரங்களின் முதிர்வு நிதி	37,597,102	
திறைசேரி பத்திரங்களின் / பட்டியல்களின் முதலீடு	(504,996,437)	
நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல்	(106,610,991)	
தி.பி.செ முற்பணம்	119,666,871	
கலைப்பாரது கணக்கு பெறுவனவு	2,593,828	
வட்டி பெறுவனவு	100,935,825	
முதலீட்டு நடைமுறையிலுள்ள காசு பெறுவனவுகளின் தேறிய நிதி		(350,813,802)
காசு மற்றும் காசுக்கு சமனான சொத்துக்களின் தேறிய அதிகரிப்பு		22,053,937
2021.01.01 திகதிய காசு மீதி	29,531,358	
2021.01.31 திகதிய காசு மீதி	51,585,296	
		22,053,937

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	-	-
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	22,760,428.00	24,086,353.00
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3		
மொத்த சொத்துக்கள்		22,760,428.00	24,086,353.00
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		22,760,428.00	24,086,353.00
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		-	-
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	-	-
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3		
மொத்தப் பொறுப்புக்கள்		22,760,428.00	24,086,353.00

பக்க இலக்கம் 8 முதல் 54 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 55 முதல் 62 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
